**தலைப்பு 108 – தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 108 – தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 30 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### (அ) மொத்த நிதி ஏற்பாடு மற்றும் செலவினம்

---

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 130.90 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 127.73 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 3.17 மில்லியன் தொகை அதாவது 2.4 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 101.70 | 98.64 | 3.06 | 3.01 |
| மூலதனம் | 29.20 | 29.09 | 0.11 | 0.38 |
| மொத்தம் | **130.90** | **127.73** | **3.17** | **2.42** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 10801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான து | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான து | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா.மில்லிய ன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.00 | 2.87 | 1.80 | 2.89 | 25.00 | 10.63 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 7002/0000/00/0349/0015/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 9.03 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழான 03 வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.99 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0130/000 | 0.06 |
| 6000/0000/00/0016/0079/000 | 0.67 |
| 6000/0000/00/0018/0016/000 | 0.26 |
| மொத்தம் | 0.99 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

03 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் ரூபா 1.88 மில்லியனாக இருந்து. அது தேறிய நிதி ஏற்பாட்டின் 10 சதவீதத்திலிருந்து 56 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

10801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 146,611 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்திற்கு வாகனமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அது முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வேறு நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

நிதி அமைச்சிற்குரிய வாகனமொன்று அமைச்சிற்கு முறையாக கையளிக்கப்படாது அமைச்சின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாகனம் விபத்திற்குட்பட்டதன் பின்னர் வழக்குப் பொருளொன்றாக கல்கிஸ்ஸ நீதிமன்றத்தில் நிறுத்தி வக்கப்பட்டிருந்தமையால் அவ்வாகனத்தை பொறுப்பேற்கவோ அல்லது எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்ததாக அமைச்சின் செயலாளரினால் 2016 யூலை 26 ஆந் திகதி எனக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

நிதிப் பிரமாணம் 94(i) ஏற்பாடுகளுக்கு இணங்காமல் 16 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 24.68 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அப்பொறுப்பில் ரூபா 12.69 மில்லியன் 2014 ஆம் ஆண்டின் போது கணனி மற்றும் உபபாகங்கள் கொள்வனவிற்காக செலுத்த வேண்டிய தொகையாக இருந்தது.

**3.4 இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | |
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சிற்குரிய வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை 06 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2011 பெப்ப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க சுற்றறிக்கை | | அமைச்சு செயலாளரின் மாதாந்த கடமைகள் மற்றும் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் அளவு 225 லீற்றர் டீசல் ஆக இருந்த போதிலும், அமைச்சின் செயலாளரால் 2015 சனவரி 29 ஆந் திகதி முதல் 2015 மே 13 ஆந் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி ரூபா 95,743 ஆன மேலதிக எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது |

(ஆ) **அரச நிதிச் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சிற்குச் சொந்தமான கைதவிர்க்கப்பட வேண்டிய 04 வாகனங்கள் தொடர்பாக உரிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.5 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### 3.5.1 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நவீன தபால் சேவையை வழங்குதல் மற்றும் அதனை செயற்திறனாக பராமரித்துச் செல்வது அமைச்சின் நோக்கமாக இருந்ததுடன், தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்துவதன் மூலம் இந்த இலக்கை அடைந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய இச்செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 648.81 மில்லியனாக இருந்த போதிலும், ரூபா 539.11 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) தபால் அலுவலகங்களை வலையமைப்பிற்கு உட்படுத்தும் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவில் 647 தபால் அலுவலகங்களையும் 3,410 உப தபால் அலுவலகங்களையும் வலைப்பின்னல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் மூலம் மாவட்ட தபால் அலுவலகங்களும் 647 பிரதான தபால் அலுவலகங்களும் மாத்திரம் வலையமைப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த தபால் அலுவலகங்களை வலையமைப்பிற்கு உட்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டம் அடைவதைத் தவிர்த்து வருமானத்தையும் செலவினத்தையும் சமநிலையில் பேணிச் செல்வது பிரதான நோக்கமாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிலைமையை அடைந்துகொள்ள முடியாமல் இருந்தது. 2008 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை நட்டம் வருமானத்தின் 45.5 முதல் 75 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தன.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலையமைப்பிற்கு உட்படுத்தப்பட்ட உதவிச் சேவையிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்குரித்தாக கணனி பிரிவிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிக்கை மற்றும் உள்ளவாறான வருமான அறிக்கையின் பிரகாரம் 06 வருமான விடயங்களின் வருமானம் ரூபா 80.89 மில்லியன் வேறுபாடாக இருந்தது. இதன் பிரகாரம் சேகரிக்கப்பட்ட உள்ளவாறான வருமானம் கணனி அறிக்கைகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டிற்கான காசுக் கட்டளைக் கணக்கை தயாரிக்கும் போது இனங்காணப்பட்டிருந்த MORS மென்பொருளில் கீழே காட்டப்பட்டுள்ள நலிவுகள் கண்டறியப்பட்டன..

(i) கணனி வசதிகள் இல்லாத உப தபால் அலுவலகங்களில் காசுக் கட்டளைகளை உரிய வேளையில் கணனியில் உள்ளீடு செய்ய முடியாதிருந்தது.

(ii) நாளாந்த காசுக் கட்டளை அறிக்கைகளை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்து.

(iii) சில சந்தர்ப்பங்களில் காசுக் கட்டளைகள், பேட் முறைமைக்கு உள்ளடக்கும் போது அதனைச் செய்ய முடியாதிருந்தது.

(iv) மென்பொருளுக்கு காசுக் கட்டளை பெறுவனவுகள் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் பொழிப்பறிக்கையில் அவை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மாவட்ட கணக்கு அலுவலகங்களில் செலுத்தப்பட்ட காசுக் கட்டளை தரகுப் பணம் தொடர்பான பொழிப்பொன்றை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(ஊ) கணனி மென்பொருளில் உள்ளடக்கப்பட்ட தகவல்களில் மேற்குறித்த பலவீனங்கள் காணப்பட்டமையால் 2014 ஆம் ஆண்டின்போது திணைக்களத்தின் காசுக் கட்டளைக் கணக்கு இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்ட மீதிகள் மற்றும் கணனி மென்பொருளில் குறிப்பிடப்பட்ட மீதிகள் என்பவற்றுக்கு இடையே கீழே காட்டப்பட்டுள்ளவாறு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **விபரம்** | **கணனி மென்பொருளின் பிரகாரம் மீதி** | **காசுக் கட்டளைக் கணக்கு இணக்கக் கூற்றின் பிரகாரம் மீதி** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| காசுக் கட்டளைகளை வழங்குதல் | 11,337.26 | 12,173.17 | 835.91 |
| காசுக் கட்டளைக் கொடுப்பனவு | 11,021.29 | 12,116.59 | 1,095.30 |
| காசுக் கட்டளைத் தரகு வருமானம் | 107.06 | 108.64 | 1.58 |

(எ) முன்னைய ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், வலையமைப்பு மென்பொருளை அபிவிருத்தி செய்து பூர்த்தி செய்ததன் பின்னர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் தபால் திணைக்களம் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் நீர்ப் பட்டியல் செலுத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. அச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு வலையமைப்பு மென்பொருளில் 2016 யூலை 21 ஆந் திகதி வரையிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வழமையான முறைமையின் கீழ் மின் பட்டியலுக்கு பணம் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் பட்டியல் கணக்கை சமப்படுத்துவதற்கு பல நாட்கள் செல்லுதல் மற்றும் பாவனையாளர் தேவைப்பாடுகளை ஒரே இடத்திலிருந்து நிறைவேற்ற முடியாமை காரணமாக அச்சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு தபால் நிலையங்களுக்கு வரும் பாவனையாளர்கள் வேறு நவீன துரித முறைமைகளை நாடிச் சென்றுள்ளனர்.

(ஐ) தபால் வலையமைப்பு செயற்திட்டத்தின் கீழ் முத்திரை கட்டுப்பாட்டுக் கணக்கு வைப்பதற்காக முத்திரை கணனி மென் பொருளொன்று அறிமுகப்படுத்தட்டிருந்த போதிலும் அது முத்திரை பணியகத்தின் நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முத்திரை பாதுகாப்பகம், முத்திரைக் களஞ்சியம் மற்றும் தபால் அலுவலகங்களுக்கு முத்திரை கட்டளையிடல், முத்திரை விநியோகம், இருப்புக் கட்டுப்பாடு மற்றும் கணக்கு நடவடிக்கைகள் என்பன இதன் மூலம் மேவுகை செய்யப்படவில்லை.

(ஒ) திணைக்களத்தின் மூலம் மின்சாரம் பட்டியல், தொலைபேசிப் பட்டியல், காப்புறுதிக் கட்டணங்கள் போன்றவற்றை சேகரிக்கும் போது வெளி மாகாணங்களில் கருத்திற் கொள்ளக்கூடியளவில் பட்டியல் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், மேல்மாகணத்தில் அது குறைந்த பெறுமதியில் காணப்பட்டது. வேலைப் பழுவான மக்கள் இலகு மற்றும் விரைவான முறைமைகள் மூலம் அவர்களின் தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளுதல் நகரமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் தபால் அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அச் சேவைகளிலிருந்து நீங்கும் போக்கு காணப்படுவது அவதானிக்கப்பட்டது. ஆதலால் ஏனைய நிறுவனங்களுடன் போட்டியிடக்கூடிய இலகுவான மற்றும் விரைவான முறைமையொன்றை வலையமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தி வாடிக்கையாளர்களை தபாலகங்களில் தக்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) வலையமைப்பின் ஊடாக பட்டியல்கள் கொடுப்பனவு செய்யப்படும் போது, முறைமை செயலற்றுப் போகும் சந்தர்ப்பங்களில் வேறு முறைமையொன்றின் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் உப தபாலகங்களுக்கு தொடர்புபடுத்தும் சந்தர்ப்பங்கள் மற்றும் மீண்டும் வேறுநாளில் வருகை தரும் சந்தர்ப்பங்களும் இருந்தன.

(ஔ) வலையமைப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்த தபால் அலுவலகம் தொடர்பாக உள்ளக கணக்காய்வு பிரிவினாலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் குறைபாடுகள் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தன.

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### 3.6.1 அரச கொள்வனவு வழிகாட்டிகோவை செயற்பாடுகளிலிருந்து விலகுதல்

#### (அ) அமைச்சரின் அலுவலகத்தை நவீனமயப்படுத்தல்

அமைச்சரின் அலுவலகத்தை நவீனமயப்படுத்துவதற்காக 2015 இன் திருத்திய பாதீட்டு மதிப்பிட்டின் பிரகாரம் ரூபா 2,450,000 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது இதற்காக ரூபா 2,217,675 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ஆரம்ப வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 150,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் தேவையான நிதிஏற்பாடு

ஒதுக்கீடு செய்யப்படாமல் அந் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,421,100 ஆன ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலையைக் கோருவதற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 07 நிறுவனங்களிடமிருந்து விலை விபரங்கள் கோரப்பட்டிருந்தன. 04 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 03 நிறுவனங்களுக்கு கேள்வி கோரல் கடிதம் அனுப்பப்பட்டதை ஏற்றுக் கொள்ளக்கூடிய உறுதிப்படுத்தும் சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(iii) இதன் பிரகாரம் அதிகூடிய போட்டி விலை விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. அதன் பெறுபேறாக மதிப்பிடப்பட்ட விலை ரூபா 203,400 ஆல் விஞ்சி சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை விபரங்களைக் குறைந்த விலையாக ஏற்றுக்கொள்ள நேர்ந்திருந்தது.

(iv) சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை விபரங்கள் கொள்வனவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு உரிய அங்கீகாரத்தை பெறப்படாது ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**(ஆ) கணனிகள், அச்சீட்டு இயந்திரங்கள் மற்றும் தொடர் மின் வழங்கல் அலகுகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்தல்.**

---

அமைச்சிற்காக 04 கணனிகள், 01 அச்சீட்டு இயந்திரம், 04 தொடர்ச்சியான மின்சாரம் வழங்கல் அலகு என்பவற்றை 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி ரூபா 426,104 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச கொள்வனவு வழிகாட்டி கோவையின் 1.2.1(ஈ) வழிகாட்டலின் பிரகாரம் தகைமையுடைய அக்கரை செலுத்தும் தரப்பினருக்கு கொள்வனவிற்கு சமுகமளிப்பதற்காக நியாயமான, சமமான மற்றும் கூடிய சந்தர்ப்பமொன்று வழங்கப்படாது அமைச்சினால் ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரமே கூறுவிலை கோரப்பட்டிருந்தது.

(ii) இக் கொள்வனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கூறுவிலையைச் சமர்ப்பிப்பதற்காக நியம விதத்துரைப்புக்களுடன் கூடிய கூறுவிலைப் பத்திரங்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன், 2015 மார்ச் 24 ஆந் திகதி ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் விலை கோரல் மேற்கொள்ளப்பட்டு கணக்காளரினால் உரிய நிறுவனத்திற்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவில் பொருட்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.7 நட்டங்களும் சேதங்களும்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 25 ஆந் திகதி இடம் பெற்ற வாகன விபத்தொன்று காரணமாக ரூபா 296,951 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் முழுமையான அறிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் இடம் பெற்ற 03 வாகன விபத்துக்களுக்குரிய பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டு நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சின் நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் 02 வாகன விபத்துக்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

2015 மே 05 ஆந் திகதி முதல் மே 11 ஆந் திகதி வரை ஹஜ் யாத்திரிகைக்காக சவூதி அரேபியாவிற்கு செல்லும் யாத்திரிகர்களின் வசதிகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சரின் இணைப்புச் செயலாளர், முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சரின் செயலாளர் ஆகியோர் சவூதி அரேபியாவிற்குச் செல்வதற்காக அங்கீகாரம் கோரியிருந்ததுடன், செயலாளர் தவிர ஏனைய உத்தியோகத்தர்களுக்கு 2015 ஏப்ரல் 28 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலாவிற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அதாவது 2015 ஏப்ரல் 27 ஆந் திகதி அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வெளிநாட்டு பிரயாணச் செலவினப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. செயலாளரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 285,600 தொகை 2 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக கையில் வைத்துக் கொண்டு 2015 யூலை 07 ஆந் திகதி தீர்வு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இச் சுற்றுலாவிற்காக உரிய செலவின விடயத்தின் கிழ் போதியளவு நிதி ஏற்பாடு காணப்படாமையால் மேலதிக நிதி ஏற்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஹஜ் நிதியத்திலிருந்து ரூபா 385,928 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 14 | 00 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 61 | 46 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 30 | 26 | 04 |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 04 | 03 | 01 |
| | | ----------- | -------- | ---------- |
| | மொத்தம் | 113 | 91 | 22 |
| | | ==== | ===== | ===== |

.